Kalpana

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்



## சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை - 2010

## உயர்கல்வியில் பெண்கள்:
## சமூக, பொருளாதார அணுகுமுறை

பேராசிரியர். மா.சின்னத்தம்பி
கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

2010 சித்திரை 05

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

சீமாட்டி லீலாவதி இராமநாதன்

# நினைவுப் பேருரை

## உயர்கல்வியில் பெண்கள் - ஒரு சமூக, பொருளாதார அணுகுமுறை

பேராசிரியர் மா.சின்னத்தம்பி
கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,
இலங்கை.

05.04.2010

## துணைவேந்தரின் வாழ்த்து

சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையில் இணைந்துள்ள உங்கள் அனைவரையும் நிறைந்த அன்புடன் வரவேற்கின்றோம்.

ஒரு நீண்ட இடைவெளிக்குப்பின் எங்கள் செழுங்கலை நியமத்தின் 25வது பட்டமளிப்பு வைபவத்தினை நிறைவுசெய்து வழமைபோல லீலாவதி அம்மையாரின் நினைவுப் பேருரை வைபவத்தில் கூடியுள்ளமையில் மனது நிறைகின்றது.

லீலாவதி அம்மையாரின் கல்வி–பண்பாட்டியல் பணிகளை கௌரவிக்கும் வண்ணம் அவரது வாழ்வியலுக்கு நெருக்கமான பெண்கல்வி சார்ந்த பொருளில் இன்றைய நினைவுப்பேருரை அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கான கல்வி சமூக முழுமைக்குமான அறிவின் திறவுகோல். சமூக மேம்பாட்டுக்கான அசைவியக்கத்தின் அச்சாணி. இந்தவகையில் **உயர்கல்வியில் பெண்கள் : சமூக பொருளாதார அணுகுமுறை** எனும் காலமுக்கியத்துவம் வாய்ந்த தலைப்பில் இன்றைய நினைவுப்பேருரையை வழங்கவுள்ள எங்கள் கல்வியியல்துறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றோம்.

கல்வியியலில் ஆழ்ந்த புலமையும், ஆய்வுத்தேடலும், ஆக்கச் செயற்பாடும் கொண்டவர் பேராசிரியர் சின்னத்தம்பி. பெண்களுக்கான உயர்கல்வியில் இன்று ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் எதிர்கொள்ளப்படும் சவால்களையும் ஆழநோக்கும் இன்றைய நினைவுப்பேருரையானது எதிர்கால மேம்பாட்டுக்கான செல்நெறியினை தெளிவாக முன்வைக்கின்றது.

**பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கம்**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
2010. 04. 05

கௌரவ தலைவர் மற்றும் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் அவர்களே,
வேந்தர் பேராசிரியர் சிவசூரியா அவர்களே,
கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன் அவர்களே,
சைவ மங்கயர்கழக தலைவர் அவர்களே,
பல்கலைக்கழக பேரவை, மூதவை உறுப்பினர்களே, பீடாதிபதிகளே பேராசிரியர்களே,
விரிவுரையாளர்களே, மற்றும் சபையோரே,
அனைவருக்கும் வணக்கம்.

இந்த வருடத்துக்கான (2010) சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்களது மிக முக்கியமான நினைவுப் பேருரையை ஆற்றுவதற்கு வாய்ப்பளித்தமையை பெரும் பேறாகக் கருதுகிறேன். இவ் பேருரை ஆற்றுதற்காக என்னை அழைத்தமைக்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு எனது நன்றியை முதலில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இவ்வுரையை ஆற்றுமாறு என்னை ஊக்கப்படுத்தி வாய்ப்பளித்தமைக்காக பட்டமளிப்பு விழாக்குழுவின் தலைவரான கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகட்டும். இவ்வாய்வுக் கட்டுரைக்கான பல ஆதாரமான ஆவணங்களை எனக்கு தந்துவிய யாழ் பல்கலைக்கழக நூலகத்தினருக்கும் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் பேராசிரியர் அ.வி.மணிவாசகர் அவர்களுக்கும் நான் நன்றியுடையேன்.

எனது பேருரையை ஆற்றத் தொடங்குதற்கு முன்னதாக பெருமைக்குரிய சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்கள் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதுபெரும் கல்விமானும் வள்ளலும் அரசியல் தலைவருமான சேர்.பொன்.இராமநாதனின் பிற்கால வாழ்வில் அம்மையார் ஓர் இலட்சிய மனைவியாக வாழ்ந்தவர். கவர்ச்சிமிக்க உன்னத ஆளுமை கொண்ட இலங்கைத் தமிழரான சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் விசுவாசம் மிக்க தொண்டராகவும் பின்பு செயலாளராகவும் செயற்பட்டவர். இதற்கும் மேலாக இந்து புராணங்கள் காவியங்களில் விபரிக்கப்பட்டது போல் இலட்சிய நங்கையாகவிருந்து அவரது அனைத்து காரியங்களிலும் துணை நின்றவராவார். அவரது வாழ்வில் மிகப்பெரிய பங்கினை அவர் வகித்து நின்றார். சேர்.பொன்.இராமநாதன் அவர்களை நல்ல நண்பராகவும் விசுவாசமான ஆசிரியனாகவும் எப்போதும் மதிக்கத்தக்க மெய்வடிவமாகவும் அம்மையார் கண்டு மகிழ்ந்திருந்தார்.

1930 இல் சேர்.பொன்.இராமநாதன் அமரத்துவம் அடையும் வரை அவரது இலட்சியங்களைப் பின்பற்றி அவரது சமூகத்திற்காக பாடுபட்டார். இதற்கும் மேலாக அவர் மறைந்து இரு தசாப்தங்களுக்கு மேலாக 1952இல் இறக்கும் வரை அவரது சேவைகளைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்தார். தனது தாய் நாட்டிற்கு திரும்பிச் செல்லாது இந்த மக்களோடு வாழ்ந்து இறுதிவரை உத்தமமான யாழ்ப்பாண தமிழ் இந்துப் பெண்ணாகவே வாழ்ந்திருந்தவர் சீமாட்டி லீலாவதி அவர்கள். இதனால் இன்றுவரை எமது மக்களின் இதயங்களில் தூய்மையாக வாழ்ந்து வருகின்றார்.

இன்றைய எனது ஞாபகார்த்த பேருரையின் தலைப்பு "உயர்கல்வியில் பெண்கள் : சமூக பொருளாதார அணுகுமுறை" என்பதாகும். இந்த விடயம் இவரது சேவையுடன் நெருக்கமான தொடர்புடையது என்பதால் இது மிகவும் பொருத்தமான தென்று நான் நம்புகிறேன்.

## உயர்கல்வியில் பெண்கள் : சமூக பொருளாதார அணுகுமுறை

கடந்த அரை நூற்றாண்டு காலப்பகுதியில் உயர்கல்வியானது முன்னுரிமை பெற்ற மேட்டுக்குடியினரிடமிருந்து எல்லா மக்களுக்குரியதாக கைமாறி விட்டது. சமூக மற்றும் அரசியல் ரீதியில் முன்னுரிமை கொண்டவர்களிடமிருந்து படிப்படியாக விலக்கப்பட்டவர்களுக்கும் உயர்கல்வி கிடைக்கலாயிற்று. இத்தகைய மாற்றம் பெண்களுக்கான உயர்கல்வி வாய்ப்பையும் அகலப்படுத்தலாயிற்று.

இத்தகைய உயர்கல்வியிலான அசைவு 1940களிலும் 1950களிலும் அமெரிக்காவில் ஏற்பட்ட போதிலும் படிப்படியாக மேற்கு ஐரோப்பாவுக்கும் வேறு பல வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் 1960களிலும் 1970களிலும் பரவலாயிற்று. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் இது உலகளாவிய ரீதியில் நிலை பெறும் அம்சமாகிவிட்டது. (Peter Soott : 1998) இதுவே பெண்களுக்கான உயர்கல்வி வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்யும் சக்தியாகவும் பெண்களை உயர்கல்வி நோக்கி விரைவுபடுத்தும் காரணியாகவும் அமைந்தது.

இந்த அசைவியக்கம் இடைநிலைக்கல்வியில் ஏற்பட்ட பெண்கல்வி வாய்ப்புக்களுடனும், நாடுகளின் உற்பத்தி முறைகளில் பெண் ஊழியருக்கான தேவைப்பாடுகளின் அதிகரிப்புடனும், குடும்பங்களின் நுகர்வுப் பழக்கங்களின் மாறுதல்களினால் உருவாக்கப்பட்ட இரு உழைப்பாளர் குடும்பங்களின் பெருக்கத்துடனும் தொடர்புடைய மாற்றமாகக் காணப்பட்டது.

பெண்களும் உயர்கல்வியில் பங்கேற்பதற்கான சாதக சூழ்நிலைகளினால் பல நாடுகளில் உயர்கல்வியில் சேரும் மாணவர் தொகை அசாதாரணமாகப் பெருக்கமடைந்தது. ஐக்கிய அமெரிக்காவில்

இடைநிலைக் கல்வியை நிறைவு செய்து பல்கலைக்கழக கல்விக்குள் நுழையும் மாணவர் தொகை 1978இல் 11 மில்லிய னாயிருந்து 1998ல் 14 மில்லியனாக அதிகரித்திருந்து. சிலி நாட்டிலும் 1978இல் இத்தகைய மாணவர் தொகை 131000 இலிருந்து 1988இல் 343000 ஆக அதிகரித்திருந்தது.

பெண்கள் உயர்கல்வியில் அதிகம் பங்கேற்பதற்கான தள்ளுவிசையாக உயர்கல்வியை சனநாயகப்படுத்தும் நடைமுறை அமைந்தது. 1945களில் குடியேற்றவாத நிலைமைகளில் உயர்கல்வி நிறுவனங்கள் தந்தக் கோபுரங்களாக விளங்கி சிலரது தனியுரிமையாயிருந்தன. ஆனால் 1950களிலும் அதனைத் தொடர்ந்த காலப்பகுதிகளிலும் உலகயுத்தத்தின் பின் நலன்புரி அரசுகள் உருவாகி அரசாங்கம் பொதுமக்களுக்குரிய கல்வி வழங்குநராக தன்னை நிலை நிறுத்தியபோது உயர்கல்வி சனநாயக மயப்படுத்தப்பட்டது.

சந்தைகளில் ஏற்பட்ட துரித மாற்றங்களும் நுகர்வோர் பண்புநலன்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களும் உயர்கல்வி வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்தற்கான கேள்வியை உயர்த்தின.

உயர்கல்வியை சனநாயகப்படுத்துவதற்கும் சந்தைவழியான கேள்வியை அதிகரிப்பதற்கும் தூண்டுதலாயிருந்த காரணிகள் உலகரீதியாக பெண்களுக்கு உயர்கல்வியிலான வாய்ப்புக்கள் பெருகுதற்கு பொறுப்பாயிருந்தன என்று பீற்றர்ஸ்கொற் (Peter Scott : 1998) என்ற ஆய்வாளர் விளக்குகிறார்.

ஆசிய ஆபிரிக்க நாடுகளில் குடியேற்றவாதத்துக்கெதிரான போராட்டங்கள் பரவத்தொடங்கிய போது அதில் பங்கு பற்றுவோராக பெண்களையும் உள்ளடக்குவதற்கு எத்தனித்த போது, அதனை

வலுவானதாக்குவதற்கு பெண்களுக்கு போதிய கல்வி வழங்கப்பட வேண்டியதனவசியம் உணரப்பட்டது.

எனினும் பெரும்பாலான வளர்முக நாடுகளில் இயங்கி வந்த பல்கலைக்கழகங்கள் மேட்டுக்குடியினருக்குரியனவாகவே நிலைத்திருந்தன. இந்த நாடுகளில் தொடர்ந்து நிலவிய பொருளாதார குறைவிருத்தி நிலைமைகளும் உயர்கல்வியை விடவும் ஆரம்பக்கல்விக்கே முன்னுரிமை வழங்குமாறு இந்த நாடுகளை நிர்ப்பந்தித்தன. இதனால் மிக அண்மைக்காலம் வரையிலும் மூன்றாம் உலக நாடுகளில் வாழும் பெண்களுக்கு போதிய ஆரம்பக்கல்வியே போதுமானதென்ற கருத்து வலுப்பெற்றுள்ளது.

உலகின் பொருளாதார சமூக மாற்றங்கள் ஒரு புறம் வடக்குலக நாடுகளில் பெண்களுக்கான உயர்கல்வி வாய்ப்புக்களை அகலத்திறக்க உதவிய போதிலும் தெற்குலக நாடுகளில் அத்தகைய நிலையை உருவாக்க முடியாதனவாகவேயிருந்தன.

## உயர்கல்வி நோக்கும் போக்கும்

உலகில் 900 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல்கலைக்கழகங்கள் தம்மை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பண்புடனிருந்திருக்கின்றன. உயர்கல்வியிலும் ஆராய்ச்சியிலும் உன்னதங்களை உருவாக்குவதே பல்கலைக்கழகங்களின் நோக்கமாகும். பல்கலைக்கழங்களினால் வழங்கப்படுகின்ற கல்வியே உயர்கல்வியாகும். இன்று பலநாடுகளில் பல்கலைக்கழகங்களுக்குச் சமனாக உன்னதமான அறிவையும் ஆராய்ச்சித்திறன்களையும் வழங்கும் பல நிறுவனங்கள் பொதுத்துறையிலும் தனியார்துறையிலும் வளர்ந்து வருகின்றன. பாரியளவிலான உற்பத்தி, விநியோகம் போன்றவற்றில் ஈடுபடும் தொழிற்துறை (Industry) யும் உயர்கல்வி வழங்குவதில் உயர்முனைப்புடன் செயற்படுகின்றது. பல்தேசிய

கூட்டுத்தாபனங்கள் போன்று தாய்நாட்டில் தலைமை நிறுவனத்தையும் உலகின் பல நாடுகளிலும் கிளை நிறுவனங்களையும் வைத்து நிர்வகித்து உன்னத அறிவு வளர்ச்சியையும் ஆராய்ச்சித்திறனையும் ஏற்றுமதி செய்யும் கரைகடந்த பல்கலைக்கழங்களும் (Off-Shore Universities) நன்கு வளர்ந்து விட்டன. உலகமயமாதலும் மின்னியல் வளர்ச்சியும் தகவல் தொடர்பாடல் துறையின் நவீனமயமாக்கமும் உயர்கல்வி நிறுவனங்களையும் உயர்கல்விச் செயன்முறையையும் துரிதமாற்றங்களுக்குட்படுத்தி இலகுவில் எட்டத்தக்க சந்தைப் பொருளாக்கி விட்டது.

உயர்கல்வியானது தனிமனிதர்களிடம் நிபுணத்துவ அறிவை உருவாக்கி அதனை சந்தைப் பெறுமதிமிக்கதாக சான்றிதழ்ப்படுத்தும் பணியை மாத்திரம் செய்தலாகாது. மானுடத்தின் சீர்மைக்கும், விழுமிய முன்னேற்றத்துக்கும், சமநிலைமிக்க நிலைத்திருப்புக்கும் பங்களிப்புச் செய்யக்கூடிய கூர்மையான அறிவையும் திறன்களையும், நடுநிலை நோக்கையும், விழுமியப்பற்றுணர்வையும் வளர்த்தல் வேண்டும். இத்தகைய மானுடகுல மேம்பாட்டுக்கான பணியை அதிகரிக்கவும் உறுதிப்படுத்தவும் உயர்கல்வியில் உலக மக்கள் தொகையில் அரைப்பங்கினராகவும் குடும்பம் என்ற பண்பாட்டு அலகின் உயிர்நிலையாகவும் விளங்கும் பெண்கள் பங்கேற்பதன் அவசியம் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் அரச பல்கலைக்கழங்களுக்கு 2009இல் 46,000 மாணவர் விண்ணப்பித்து 20,270 பேர் அனுமதி பெற்றனர். இவர்களில் 50சதவீதத்துக்கு மேற்பட்டோர் பெண்களாவர். கணிசமான எண்ணிக்கையினர் கரைகடந்த பல்கலைக்கழகங்களில் (புள்ளிவிபரம் கிடைப்பதில்லை) கல்வி கற்கும் போது ஏறக்குறைய 8000 மாணவர் உயர்கல்விக்காக நாட்டை விட்டுச் செல்கின்றனர். வருடாந்தம் 80,000 பேர் பல்வேறு மாதிரிகளில் உயர்கல்வி கற்றுவருகின்றனர். இவர்களில் அரைப்பங்கினராக பெண்கள் இருப்பது இலங்கையின் உயர்கல்விப் பண்பின் சிறப்பம்சங்களில் குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த மூன்று தசாப்தங்களாக உலகளாவிய ரீதியில் உயர்கல்வியின் நோக்கிலும், வளர்ச்சியிலும், போக்கிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. உயர்கல்வி கிடைத்தல் சரிநகர், சமத்துவம், பொருளாதார வருவாய்கள் தொடர்பாகவும் அதீதகவனம் செலுத்தப்பட்டு வருவதை உலக ரீதியிலான கல்வியியல் ஆய்வுகள் புலப்படுத்தப்படுகின்றன.

இதில் பெண்களின் வகிபாகம் பற்றிய அக்கறையும் விவாதங்களும் கூர்மையடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. உலகரீதியான பொருளாதார வளர்ச்சி வறுமைதணிப்பு, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பாக உயர்கல்வியின் முக்கியத்துவம் மிகுந்த வலிமையுடன் முன்வைக்கப்படும் போது அவை சார்ந்த ஆராய்ச்சி அணுகுமுறையின் கவனம் பெண்களின் உயர்கல்வி மீதும் படிகிறது. ஆராய்ச்சி அணுகுமுறைகளில் நிகழ்ந்து வரும் பன்முகவாக்கம் உயர்கல்வியிலான பெண்களின் தரநிலை பற்றிய ஆய்வுகள் பரவலாக மேற்கிளம்புவதற்கு தூண்டுதல் வழங்கி வருகின்றன.

## பெண்கல்வி முக்கியத்துவம்

தேசங்களின் குடித்தொகையின் அளவு, குடித்தொகைப் பெருக்கம் மற்றும் சேர்க்கை என்ற பல அம்சங்களில் பெண்கள் வலுவான காரணியாக துலங்குகின்ற நிலைமையானது பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியிலான உயர்கல்விப் பங்களிப்பு பற்றிய புத்தாய்வுகளில் பெண்களின் அந்தஸ்து தொடர்பான காத்திரமான தேவைகளுக்குரிய தளத்தை அமைப்பதாயிற்று.

மனிதனை ஒரு சமூகப் பிராணியாக மதித்து ஆராய்கின்ற சமூகவியல் அணுகுமுறை கார்ல் மார்க்கின் சித்தாந்தத்திற்கு பின்பு

ஏற்பட்ட முன்னேற்றமாகும். தனித மனித செயற்பாடுகளை தனித்த நோக்காது, மாறாக மனிதனையும் அவனது இயல்புகளையும் சமுதாயத்தின் ஓர் அங்கமாக நோக்குவது இவ்வாய்வு முறையின் சிறப்பம்சமாகும். இதன்படி உயர்கல்வியின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திப்பங்களிப்பு பற்றிய ஆய்வில் பெண்களின் நிலையை தனியாக பிரித்து ஆராய்வது அவசியமாகியுள்ளது.

இந்தியாவில் 1960 -1970களில் உருவான பசுமைப்புரட்சியிலும் 1980களில் ஏற்பட்ட வெண்மைப்புரட்சியிலும் கிராமிய மகளிரின் பங்களிப்பு உற்பத்திப் பக்கத்தில் முக்கியமானதாக அமைந்த போது அவர்களது தனியாள் வினைத்திறன் மாற்றங்களில் அவர்தம் கல்வியின் அளவு கொண்டிருந்த செல்வாக்கு ஆய்வாளர்களினால் உணரப்பட்டது. உலகில் அதிகளவு கிராமிய பெண்களைக் கொண்ட நாடுகளான சீனா, இந்தியா போன்ற நாடுகளில் நெல் உற்பத்தியிலான அபரி மிதமான பெருக்கத்தை பெண்கல்வியுடன் தொடர்புபடுத்தி ஆராயும் போக்குவலுவடைந்தது.

தேசிய ரீதியில் உற்பத்தி தொடர்பாக பாரிய திட்டமுனைப்புக்கள் தோன்றிய போதெல்லாம் பொதுமுகாமைத்துவ வகுப்பினரான அதிகார வர்க்கத்தில் பெண்கள் உரிய இடத்தைப் பெற்றிருக்கவில்லை. இதற்கு உயர்கல்வி நோக்கிய பெண்களின் நகர்வு விசை குறைந்து காணப்பட்டமையும் ஒரு வலுவான காரணியாயிற்று, தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளில்லாத நிரந்தர பொதுத்துறை நிர்வாக உயர்பதவிகளுக்கு தலைமை தாங்குவர்களில் பெண்களின் சதவீதம் நியாயமான அளவில் பேணப்படாமைக்கு உயர்கல்வி நோக்கி அவர்களைத்தள்ளும் காரணிகள் பலவீனமாக இருந்தமை உணரப்பட்டது.

ஜேர்மனிய சமூக விஞ்ஞானியான மாக்ஸ் வெபர் அதிகார வர்க்கம் என்பது எல்லா அரசியல் முறைமைகளிலும் மென்மேலும் நிபுணத்துவம் வாய்ந்த உத்தியோகத்தர்களினால் உருவாக்கப்பட்ட குழாமாக

காணப்படுவதோடு பாரிய சிக்கலான அமைப்புக்கள், வியாபாரதலங்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் போன்ற அனைத்திலும் அது தவிர்க்க முடியாத சக்தியாக விளங்குவதாகவும் குறிப்பிடுகிறார். பதவிவழியாக அதிகாரங்களையும், செல்வாக்குகளையும் பெறுகின்ற இவர்கள் அபிவிருத்தி தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் வலிமை கொண்டவர்களாக உள்ள போது உயர்கல்வி வாய்ப்புக் குறைவினால் பெண்களின் பங்கு இதில் மிகவும் குறைவாகவே காணப்படுவது கவனிக்கப்பட வேண்டியதாகும். உலகரீதியில் ஊழியப்படையில் உயர் நிர்வாகிகளாகவும் முகாமையாளர்களாகவும் செயலாற்றும் பெண்கள் குறைவாகவேயுள்ளனர். வளர்ச்சியடைந்த நாடுகள் மற்றும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இந்த நிலைமையை அவதானிக்க முடியும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் இவர்கள் சதவீதம் 33.0 ஆக காணப்படும் போது பிரான்ஸ் நாட்டில் 9.0 சதவீதமாக மாத்திரமேயுள்ளது. ஆசியாவில் இந்த வீதம் 13.0 ஆகவும் ஆபிரிக்காவில் 15.0 ஆகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

## பெண்களின் கல்வி பற்றிய முடிவுகள்

குடும்ப மட்டத்தில் மாத்திரமன்றி சமூகரீதியாகவும், தேசியரீதியாகவும் பெண்கள் உயர்கல்வியில் சேர்வது, கற்கை நெறியைத் தெரிவு செய்வது, கற்கை நெறியை தொடர்வது, மற்றும் நிறைவு செய்வது பற்றிய முடிவுகள் ஆண்களினால் அல்லது அவர்கள் தலைமை தாங்கும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய முடிவுகளை மேற்கொள்ளும் போது மரபு வழியாக தனிப்பட்ட ரீதியிலும் சமூக விழுமிய பண்புகளின் படியும் பேணப்பட்டு வருகின்ற தகைமை விதிகளுக்கு அமைவாகவே மேற்கொள்கின்றனர்.

பெண் தனியாக வாழக்கூடியவர், வாழவேண்டிய எல்லா உரிமைகளும் இயலுமைகளும் கொண்டவர் என்பதை ஏற்றுக்கொள்வதில்லை. இது பெண்கள்சார் பாதுகாப்புணர்வு பற்றிய நல்ல அணுகுமுறை என்றவாறே நியாப்படுத்தப்படுகின்றது. தந்தை, சகோதரன், கணவன் என்ற பலநிலையிலுமான சமூக முறைமையிலான உறவுகளினூடாக "பாதுகாப்பாளன்" என்று தன்னை அங்கீகரித்துக் கொள்வதன் மூலம் அந்த கடமைக்கூறைப் பயன்படுத்தியே அவர்களது உயர்கல்வி வாய்ப்புக்களையும் வசதிகளையும் கட்டுப்படுத்திக் கொண்டு வந்துள்ளனர்.

உண்மையில் பெண்களின் உயர்கல்வி மேம்பாடு அவர்களது தனிப்பட்ட கல்விக்குரிய வருவாய்களை மாத்திரம் அதிகரிக்க உதவுவதில்லை. சிறிய மற்றும் வறிய குடும்பங்களின் முன்னேற்றங்களை அவர்களது உயர்கல்வியும் அதனால் பெறப்படும் தொடர்பயன்பாடுகளும் நிர்ணயித்து வருகின்றன என்பதை பல வளர்முக நாடுகளின் அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன.

பெண்களது ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வி அறிவும் அதனால் ஏற்படும் நடத்தை மாற்றங்களும் எவ்வாறு குழந்தைகளை ஆரோக்கியமானவர்களாகவும் தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும் வளர்க்க உதவுகின்றனவோ அதேபோல் பெண்களின் உயர்கல்வியும் அதனடிப்படையிலான உயர்தொழில்கள் என்பவற்றின் வழியாக விருத்தி செய்யப்படும் சமூக மூலதனம் அவர்களை விடவும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கான நலன்களை பலமடங்கு அதிகரிக்கச் செய்து வருகின்றன. உயர்கல்வி தனிப்பட்ட பொருளாதார மற்றும் சமூகநலன்களை விடவும் குடும்ப உறுப்பினரது பன்முக நன்மைகளை உறுதிப்படுத்துகின்றன.

உலகவங்கி பத்தாண்டுகளுக்கு முன்பே இத்தகைய சமூக நலன்களை உறுதிப்படுத்துவதற்காக பெண்கல்விக்கு குறிப்பாக உயர்கல்விக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியதனவசியத்தை வலியுறுத்தியது.

1965 – 1987 காலப்பகுதியில் உலகளாவிய ரீதியில் ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வியில் மாணவர் சேரும் விகிதம் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தபோது ஆண்களைவிடவும் குறைந்த விகிதத்திலேயே பெண்களின் சேரும் விகிதம் அதிகரித்தது. இந்த நிலைமை உயர்கல்வி மட்டத்தில் மேலும் பாதகமாயிருந்தது. மத்திய கிழக்கு, உபசகாரா, ஆபிரிக்கா, மற்றும் தென்னாசிய நாடுகளில் இந்த நிலைமை நிலவியதாக ஆய்வறிக்கைகள் சுட்டிக்காட்டின.

வளர்முக நாடுகளின் அபிவிருத்திச் செல்நெறிகள் பொதுவாக உயர்கல்வியில் ஏற்படுத்திய மாற்றங்களை அதே நேர்விகிதத்தில் பெண்களின் உயர்கல்வியில் உருவாக்கத் தவறியிருந்தன. இந்த நாடுகளில் அரசாங்கங்கள் கல்வி மீதான செலவுகளை அதிகரித்துச் சென்ற நிலையிலும் பெண்களது பாடசாலையில் சேரும் விகிதத்தில் ஆண்களுக்கு சமமான நிலையை உருவாக்க முடியவில்லை. லைபீரியா, மாலி போன்ற நாடுகளில் இந்த நிலை மிகவும் பாதகமாயிருந்தது. எனினும் இலங்கை, கொரியக்குடியரசு போன்ற நாடுகளில் பெண்களுக்கான உயர்கல்வி வாய்ப்புக்களில் குறிப்பிடத்தக்கான சமத்துவம் நிலைநிறுத்தப்பட்டது. அரசாங்கங்கள் உயர்கல்வி மீதமான செலவுகளைக் குறைக்கும் போதெல்லாம் அவற்றின் பாதிப்பு பெண்கல்வி தொடர்பாகவே மிகவும் அதிகமாயிருந்தது.

உலக குடித்தொகையில் பெண்கள் பெரும்பான்மையினராக உள்ள போதிலும் அபிவிருத்தி வாய்ப்புக்களில் மிகவும் சிறிய பங்கினையே பெண்கள் பெறுகின்றனர். சிறப்பான உயர்கல்விக்கான வாய்ப்புக்கள்

உயர்கல்விசார் சிறந்த தொழில்கள், அரசியல் பங்கேற்பு, பாதுகாப்பு மிக்க நலத்துறை வாய்ப்புக்கள் போன்வற்றிலிருந்து பெண்கள் பெருமளவுக்கு விலக்கப்பட்டு வருவது பெரும்பாலான நாடுகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. உலக குடித்தொகையில் அரைப்பங்கினராக பெண்கள் உள்ளபோதும் உலக வேலை மணித்தியாலங்களில் மூன்றில் இரண்டு பங்கினை வழங்கும் நிலையிலும், உலக வருமானங்களில் நூறில் ஒரு பங்கை மாத்திரமே அவர்கள் பெறுகின்றனர். இது பெரும்பாலான வளர்முக நாடுகளின் கட்டமைப்பு மற்றும் செயலமைப்பு சார்ந்த செயன்முறைகளின் விளைவாக காணப்படுவது தெளிவாக அவதானிக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் உயர்கல்வி வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்திய ஜொம்ரன் (2000) மகாநாட்டின் பரிந்துரைகள் பெண்கள் நோக்கில் பெருமளவு தோல்வியுற்றது.

வளர்முக நாடுகளில் நிலவுகின்ற சமூக அநீதியும் புறக்கணிப்பும் அவர்களது இயலுமையை அங்கீகரிக்க விரும்பாமையும் சமபங்காளராக அங்கீகரிக்க முன்வராமையும் தொடர்ந்து நிலவுவதாக பெண்கல்வியியலாளர் நீலு றோ மேத்ரா (Neelu Roh Metra 1995) குறிப்பிடுகிறார்.

வளர்முக நாடுகளில் உயர்கல்வியில் பெண்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றனர். உபசகாரா நாடுகளில் ஆண்களின் உயர்கல்வி சேர்வு விகிதத்திலும் பார்க்க பெண்கள் விகிதம் மூன்றில் ஒன்றாகவே காணப்படுகின்றது. விஞ்ஞான தொழில்நுட்ப கல்வியில் நன்மைகளும் அதிகாரமும் உயர்வாக இருப்பதால் வளர்ச்சியடைந்த நாடுகளிற் கூட அத்தகைய கல்வியில் பெண்கள் விகிதம் குறைவேயாகும். ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்கள் இக்கல்வியில் சேரும் விகிதம் ஸ்பெயினில் 28 சதவீதமாகவும் அவுஸ்திரியாவில் 25 சதவீதமாகவும் கனடாவில் 29 சதவீதமாகவும் மாத்திரமே காணப்பட்டது.

இலங்கையில் பல்கலைக்கழக முறைமையில் பெண்கள் அனுமதி ஆண்களை விட அதிகமாகும். 2004 – 2006 வரையிலான புள்விபரங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. 2006ம் ஆண்டில் பல்கலைக்கழக மாணவர்களில் பெண்கள் 57 சதவீதத்தினராக காணப்பட்டனர். இதனால் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வியில் பாலின சமத்துவம் மிகவும் சிறப்பாக பேணப்படுவதாக கூறப்படுவதும் அவதானத்திற்குரியதாகும்.

பொறியியல்துறை தவிர்ந்த ஏனைய விஞ்ஞான கற்கை நெறிகளிலும் பெண்கள் கல்வி கற்கும் விகிதம் குறிப்பிடத்தக்கதாயுள்ளது. விவசாயத்துறையில் இவர்கள் விகிதம் 53 ஆகவும், மருத்துவதுறையில் 53% மாகவும், மானிடவியல் துறையில் 60% காணப்பட்டது. கலைமற்றும் மனிதப்பண்பியல் துறைகளில் தான் பெண்கள் அதிகம் கற்கிறார்கள் என்ற மரபுவழி எண்ணம் பொயப்பிக்கப்படுவதை அண்மைக்கால நிலைமைகள் உறுதிப்படுத்துகின்றன. தனித்தன்மை மிக்க தொழில்வாண்மை மிக்க சட்டத்துறையிலும் பெண்களின் சதவீதம் அதிகரித்து வருவது மற்றொரு குறிப்பிடத்தக்க சாதகமான நிலைமையாகும்.

உயர்கல்வியில் பெண்களுக்கான சமத்துவத்தை நிலை நிறுத்துவதில் இலங்கை வெற்றிகண்டுள்ளது. இந்தியா, வியட்னாம், பாக்கிஸ்தான், இந்தோனிஷியா, ஈரான் போன்ற நாடுகளை விடவும் இலங்கையின் நிலைமை சிறப்பானதாயுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிக்கையின்படி பல்கலைக்கழக கல்வியிலான பெண்களின் அனுமதி 57% மாகும். இது கல்லூரி மட்டத்திலான (தரம் 12, 13) அனுமதியிலான பெண்களின் 57% த்துடன் தொடர்புடையதென்பது சிறப்பான வளர்ச்சிப் போக்காகும்.

இலங்கையில் கல்வி மீதான அரசாங்க செலவு சார்பளவில் குறைவாகவே காணப்படுகின்றது. கடந்த இரண்டு தசாப்தங்களாக மொத்த

உள்நாட்டு உற்பத்தியில் 2% - 3% மாகவே கல்விக்கான அரசாங்க செலவு இருந்து வந்துள்ளது. ஏனைய தென்னாசிய நாடுகளில் இது 3.5 சதவீதமாகும். அரசாங்க மொத்த கல்விச் செலவில் 14 சதவீதம் மாத்திரமே பல்கலைக்கழக கல்விக்கு ஒதுக்கப்படும் நிலைமை இயல்பாகவே பெண்களுக்கான உயர்கல்விக்குரிய நிதி ஒதுக்கீட்டிலும் குறைநிலையை உருவாக்கியுள்ளது.

## பெண்கல்வி - பொருளாதார முரண் நிலை

கல்வியைப் பெறுவதால் பெண்கள் அதிகளவு நன்மைகளைப் பெறமுடியும் என்று பல பொருளாதார மற்றும் கல்வி ஆய்வுகள் உறுதிப்படுத்தி வந்துள்ள போதிலும் உலகில் நிகழ்ந்துவரும் மாற்றங்களும் சீரமைப்புக்களும், பெண்கள் ஆண்களை விடக்குறைந்தவர்கள் என்று வலியுறுத்தி வரும் சமூக சித்தாந்தங்களும் அத்தகைய நன்மைகளை அவர்கள் பெறாதவாறு தடையாக இருந்துள்ளன. இதற்கு பல உதாரணங்களை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. (சந்திரசேகரம் : 2008)

- தைவான் நாட்டில் தொழிற்துறை நிறுவனங்களை முதலாளித்துவ தந்தை வழிச்சமூக சிந்தனைகள் வழிநடாத்தியமையால் அரசாங்கங்களும் தொழிற் சாலைகளும், குடும்பங்களும் வழங்கிய ஆதரவுடன் பொருளாதார வளர்ச்சிக்கு பெண்கள் முழு அளவில் சுரண்டப்பட்டனர்.
- தென்கொரியாவின் துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கு பெண்களின் கல்வித்தேர்ச்சியை விட அவர்களது மலிவான உழைப்பே பெரிதும் உதவியிருந்தது.
- எண்ணெய் வளம் மிக்க இந்தோனிஷியாவில் ஊழியர் படையில் ஆண்களை விட பெண்களின் தொகை அதிகரித்து வந்துள்ள போதிலும் ஊழியச் செறிவு மிக்க ஏற்றுமதித்துறைகளில் பெண்களது உழைப்பே அதிகம் பங்களிப்புச் செய்துள்ளது.

- இந்தியாவில் உயர்கல்வி தொடர்பாக குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்ற போதிலும், பால்நிலைப்பாகுபாட்டிற்கு எதிரான பாதுகாப்புக்கள் பல உருவாக்கப்பட்டுள்ள போதிலும், பெண்கள் உயர்கல்விசார் அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார துறைகளிலும் முழுமையாக பங்குபற்றச் செய்வதற்கு வழிகாட்டும் சிறப்பான உயர்கல்வி கொள்கைகளோ சமூகக் கொள்கைகளோ உருவாக்கப்படவில்லை.
- இலங்கையில் ஊழியப்படையின் பங்காளர் என்ற முறையில் பெண்கள் பெருந்தோட்ட விவசாயம், ஏற்றுமதிக் கைத்தொழில், ஊழிய ஏற்றுமதி போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்துள்ள போதிலும், உயர்ந்த கல்வித்தேர்ச்சிகளைக் கொண்டுள்ள போதிலும், உயர்கல்வி சார்ந்த வலிமை மிக்க உயர்தரமான தொழில்களைப் பெற்று பிரகாசிப்பதாக கூறமுடியாது.
- ஆசியாவில் பெண்களின் முன்னேற்றத்துக்கு முறைமையான பாடசாலைக்கல்வி உதவுகின்ற தென்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் குடும்ப மற்றும் சமூகமட்டத்தில் போதிய சமத்துவத்தைப் பெறுவதற்கு பாடசாலைக்கல்வி மாத்திரம் போதுமானதாயில்லை.

ஆசியாவில் உயர்கல்வி பெற்ற பெண்கள் கைத்தொழில் மயமாக்கத்தினால் நன்மைகளை அடைந்துள்ள போதிலும் உயர்கல்வி வழங்கும் பல்கலைக்கழகங்கள் பெண்களுக்கு சுதந்திரம் வழங்கும் நிறுவனங்களாக கருதப்படவில்லை.

பால் நிலை சமத்துவத்தை வழங்குவதில் உயர்கல்வியை விடவும் பொருளாதார வளங்கள் அதிக செல்வாக்குடையனவாகவும் உணரப்பட்டுள்ளது.

குடும்பமட்டத்தில் தகுதிமிக்க பிள்ளைவளர்ப்பென்பது கணவனின் பொருளாதார மற்றும் கல்வி நிலையில் தங்கியிருக்கவில்லை என்றும் தாயாகிய பெண்ணின் கல்வித் தேர்ச்சியிலேயே தங்கியிருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

பெண்களுக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்குமளவுக்கு அவர்களுக்கான கல்வி மற்றும் உயர்கல்வி தொடர்பான மேல் எல்லைகள் தளர்த்தப் படவில்லை யென்றும் ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர்.

பொருளாதார வளர்ச்சியில் கல்வி முதலீடுகளின் முக்கியத்துவம் மனிதவள அணுகுமுறையினூடாக வலியுறுத்தப்பட்டுள்ளது. நிதி முதலீடுகளுக்குரிய பொருளாதார வளர்ச்சி வீதத்தை விடவும் மேலதிகமான வளர்ச்சி வீதம் ஊழியர்கள் பெற்ற கல்வியின் அளவு, தரம் என்பவற்றால் ஏற்பட்டதாயும் அது எச்சவிளைவு (Residual Effect) என்றும் ஜோன் வைசி (John Wisey:1956) போன்றவர்கள் வலியுறுத்தி யிருந்தனர்.

கல்வி மட்டங்களுக்கேற்பவே கல்வி முதலீடுகளுக்குரிய வருவாய் அல்லது விளைவு வீதங்கள் வேறுபடுகின்றன. இடைநிலைக்கல்வி மற்றும் உயர்கல்வி என்பவற்றுக்கான விளைவு வீதங்களை விடவும் ஆரம்பக்கல்வியின் விளைவு வீதம் வளர்முக நாடுகளில் உயர்வானதென்று உலகவங்கி ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

இலங்கையில் பட்டதாரிகளை உருவாக்கும் நோக்குடன் செலவிடப்படும் பொதுத்துறை முதலீடுகள் இளைஞர்கள் வேலையற்ற பட்டதாரிகளாக மாறும் போது விரயமாகி விடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1996இல் இலங்கையின் மொத்தக் கல்விச் செலவு 1500 கோடி ரூபாயாக இருந்த போது உயர்கல்விச் செலவு 342 கோடியாக இருந்தது. பட்டதாரிகளில் ஏறக்குறைய அரைப்பங்கினர் பெண்களாக உள்ளபோது

அவர்களிலான முதலீடுகளும் விரயமாவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதிகளவு பெண்பட்டதாரிகள் பல்வேறு காரணிங்களினால் கீழ் உழைப்பில் (Under Employment) ஈடுபடுவதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

உயர்கல்வி முதலீடுகள் விரயமாவதைக் காரணமாகக் காட்டி உயர்கல்வி விரிவைக்கட்டுப்படுத்த முயலும் போது அதனால் கிராமியத்துறை சார்ந்த பெண்களுக்குரிய உயர்கல்வி அனுமதிகள் பாதிக்கப்படுவதாக உணரப்படுகின்றது.

இலங்கையில் வருடாந்தம் 180,000 பேர் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் போதும் 60,000 பேர் மாத்திரம் அனுமதிக்குத் தகுத் பெறுகின்றனர். இறுதியாக 9000 – 10,000 பேர் வரையிலேயே அனுமதிக்கப்படுகின்றனர். இதில் பெண்கள் அனுமதியும் 50 சதவீதம் வரையில் பாதிக்கப்படுகின்றது.

நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியின் துரித வளர்ச்சியென்பது நவீனமயமாக்கத்துடன் தொடர்புடையதாக காணப்படும் போது நவீனமயமாக்கம் உயர்ந்த தரத்திலான உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிகளுடன் நெருக்கமாக தொடர்பு கொண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆர்ஜென்டினா, இந்தியா, சிலி, வங்காளதேசம் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இதனை வெளிப்படுத்தின. பெண்கள் சிறப்பாகவும் செறிவாகவும் பணியாற்றுகின்ற பெண்கள்துறை என்றழைக்கப்படும் கற்பித்தல், முன்பிள்ளைப்பருவ பராமரிப்பு, நோயாளர் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு போன்ற துறைகளிலான நவீனமயமாக்கம் மற்றும் அபிவிருத்தி பெண்களின் உயர்கல்வியுடன் தொடர்புபட்டதாயிருந்தது.

பொருளாதார வெற்றி உயர்கல்வியில் அதிகரிக்கப்படும் மூலதன முதலீட்டி னளவில் பெரிதும் தங்கியுள்ளது. குறிப்பாக தொழில்நுட்பக்கல்வி, பொறியியல் கல்வி என்பவற்றிலான உறுதியான வளர்ச்சி முக்கியமானது. பெரும்பாலான ஆசிய நாடுகளில் பெண்களது சமூக விழுமியங்களினால் இத்தகைய கல்வியில் பெண்கள் இணைக்கப்படுவது மிகவும் குறைவாகவேயுள்ளது. இதனால் நவீனமயமாக்கத்திலும் துரித அபிவிருத்தியிலும் பெண்களது உண்மையான பங்களிப்பு மறுக்கப்பட்டு வருகின்றது.

மாக்சிய ஆய்வாளர்களது கருத்துப்படி கல்வி வளர்ச்சி மனிதவள மேம்பாட்டையும் பொருளாதார வளர்ச்சியையும் மாத்திரம் உருவாக்குவதில்லை. மறுபக்கத்தில் சமூகத்தில் காணப்படும் சமூக வகுப்புமுறை, ஏற்றத்தாழ்வுகள் என்பவற்றை தொடர்ந்து மீளுற்பத்தியும் செய்து வருகின்றது. இது பெண்களின் உயர்கல்வி தொடர்பான வளர்முக நாடுகளின் நிலைமைக்கு மிகவும் பொருந்துவதாயுள்ளது. அழகியல், மனைப்பொருளியல், உணவுத்தொழிநுட்பம், உபசரிப்பு முகாமைத்துவம், தாதிகள் சேவை, மருத்துவம் போன்ற பெண்களின் மரபுவழி பணிகளைத் தொடர்ந்து வலியுறுத்தும் உயர்கல்விக் கற்கைநெறிகளிலேயே பெண்களுக்கு தொடர்ந்தும் முன்னுரிமையும் ஊக்குவிப்பும் வழங்கப்பட்டு வருகிறது. சமய மற்றும் பண்பாட்டுக்கல்வியில் அவர்களுக்கு வழங்கப்படுமளவு முன்னுரிமை விண்வெளி ஆய்வு, சமுத்திரவியல் ஆய்வு, மருத்துவ பொறியியல் போன்ற துறைகளில் வழங்கப்படுவதில்லையென்பது திட்டமிட்ட அமைப்பு முறையிலான பாரபட்சமாக நிலைநிறுத்தப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பெண்கள் பல்கலைக்கழகங்களில் சிறப்புப்பட்டங்களைப் பெறுவதாலோ, பட்டமேற்படிப்பு படித்து உயர்பட்டங்கள் பெறுவதாலோ பெண்களைப் பொறுத்தவரை சிறப்பான அனுகூலங்கள் எதனையும் பெறவில்லை என்றே ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பெண்களையும் சமூகரீதியிலான தீங்குறு பிரிவினராக அங்கீகரித்து உயர்கல்வியிலும் அது தொடர்பான உயர்தர தொழில் வாய்ப்புக்களிலும் அவர்களுக்கென விசேடமாக இடங்களை ஒதுக்கீடு செய்யும் கொள்கைகள் (Positive discrimination) மூன்றாம் உலகநாடுகளில் உருவாக்கப்படவில்லை. இது பாதகமானதாகும்.

## பெண்களுக்கெதிரான வன்முறை (Voilence Against Women)

பெண்களுக்கெதிரான வன்முறை புராதன காலத்திலிருந்து உலகம் முழுவதிலும் எல்லாக் கலாசாரத்தினதும் சமூகத்தினதும் செயலமைப்பு மாதிரியில் நிலை பெற்றுள்ளது. இது பெண்கள் சமூகத்தில் முழுமையாக பங்கேற்பதற்கும் தமக்கு உரித்தான நலன்களைப் பெறுவதற்கும் அவசியமான உளரீதியான வலிமை (Mental Health) யை பெரிதும் சிதைத்து விடுகிறது. எல்லாக் கலாசாரத்திலும் மரபுவழி நம்பிக்கைகள், நியமங்கள், சமூக நிறுவனங்கள் என்பன சட்டபூர்வமான தன்மையை வழங்கி விடுவதால் அவற்றைப் பயன்படுத்தி சமூகத்தின் பொது வளங்கள் மற்றும் வாய்ப்புக்களை பெண்கள் தமக்குரியவாறு பெறாதவாறு தடைசெய்ய முடிகின்றது. பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய விரிவான ஆய்வு (Unifem 2002) இதுபற்றி குறிப்பிடுகின்றது.

வன்முறை உடல், பாலியல் அல்லது உளவியல் ரீதியில் பாதிப்புக்களை ஏற்படுத்தி அவர்களது தனிப்பட்ட வாழ்வை அல்லது பொதுவாழ்வை பாதிப்பதாக யுனெஸ்கோவின் (1999) பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய வரைவிலக்கணம் குறிப்பிடுகிறது. இதில் உடல் மற்றும் உளவியல் ரீதியிலான பாதிப்புக்கள் ஏனையவற்றை விட உயர்கல்வி தொடர்பான தடைகளை அதிகம் உருவாக்கி வருகின்றன. ஆண்கள்

மேற்கொள்ளும் வன்முறையானது உயர்கல்வி மூலம் பெண்கள் வலுவூட்டப்படுவதற்குரிய வாய்ப்புக்களைத் தருவதற்கான சரிநிகர் மற்றும் சமத்து வத்தை கடுமையாக தடுத்து விடுகின்றது.

குடும்பம் மற்றும் சமூக ரீதியில் பெண்களுக்கு வரலாற்றுக் காலத்திலிருந்து வழங்கப்பட்டு கட்டாயப்படுத்தப்பட்டுள்ள சடங்கு முறையான வேலைக் கூறுகளும் வேலைச்சுமையும் பெரும்பாலான பெண்கள் உயர்கல்வி வாய்ப்பைக் கையகப் படுத்தவதற்கான போட்டித்தகைமையை அதிகரிப்பதற்கு பெரிதும் தடையாயமைந்து விட்டன. சிறுவயது முதலே பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வேலைப்பகிர்வு முறையானது அவர்களிடம் தாழ்வுணர்ச்சி, தயக்கம், அவநம்பிக்கை, வெட்கம் போன்ற பண்பு நலன்களை வலுவான முறையில் வளர்த்து விடுகிறது. இது வறிய மற்றும் கிராமிய சமூகங்களில் மிகவும் தீவிரமாயுள்ளது. இது சர்வதேச அங்கீகாரம், உயர் அந்தஸ்து, மிகையான பொருளாதார நலன்கள், துரித சமூக அசைவியக்கம் என்பவற்றை உறுதிப்படுத்தக்கூடிய உயர்பட்டங்களை பெண்கள் பெறுதற்குரிய தடையாக வளர்ந்து விட்டது.

ஆண்கள் பெண்கள் மீது குடும்பமட்டத்திலோ சமூக மட்டத்திலோ மேற்கொள்ளும் உள் இணைக்கப்பட்ட வன்முறை (Internalized Voilence) சமூக நியமங்கள் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கி பெண்களின் பாதுகாப்பின்மையை இயல்பம்சமாக்கி விடுகின்றது. இதனை ஆண்கள் மாத்திரமன்றி சிரேஷ்ட பெண்கள் சமூகமும் ஆதரித்து வருவதால் பெண்களுக்கு மாற்று வாய்ப்புக்கள் இல்லாமலே போய்விட்டன. இது உயர்கல்வி கற்பதற்கான அனுமதியையும் அதற்காக குடும்பப்பணிகளிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான உடன்பாட்டையும் இல்லாமற் செய்து விடுகிறது.

மரபுவழி பக்கச்சார்பான சமூக ஏற்பாடுகளைப் பயன்படுத்தி பெண்களுக் கெதிராக பின்னப்பட்டுள்ள சமூக மற்றும் நிறுவன வலையமைப்பினுள் அகப்பட்டுத் தவிக்கும் பெண்களை மேலும் அழுத்தி அவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புக்களை ஒடுக்கி விடுவதில் ஆண்கள் மேலாதிக்கம் செலுத்தும் கல்விச் செயலமைப்பின் பிரதான நிறுவனங்கள் வெற்றிகண்டு வருகின்றன. ஆண்கள் இத்தகைய உளவியல் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கு மரபுவழி நிறுவனங்களும் முறைசார் நிறுவனங்களும் அதிகம் பங்களிப்புச் செய்து வருகின்றன (Linstead : 1997)

உயர்கல்வி பெற்று உயர்பதவிகளில் பணியாற்றும் நிலையிலும் கூட தொழில்புரியும் இடங்களில் எதிர்கொள்ளும் நிறுவன கலாசாரங்களும் பாரபட்ச நடைமுறைகளும் பெண்களின் உயர்கல்வி நாட்டத்தை பாதிப்பதாகவும் பெண் கல்வியியலாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர் (Mills : 2005)

உயர்கல்வி பெற்ற பெண்கள்கூட தொழில்சார் பாலியல் துன்புறுத்தலுக் குட்படுவதால் அது தொடர்பான சட்ட அம்சங்கள் பற்றிய முக்கியத்துவம் அதிகரித்து வருவதாக பல ஆய்வாளர்கள் (Hughes&Tadic:1998) குறிப்பிடுகின்றனர். அமெரிக் காவில் பணியாற்றும் ஒவ்வொரு இரண்டு பெண்களில் ஒருவர் தம் தொழில் வாழ்வில் ஏதோ ஒரு நிலையில் இத்தகைய துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர் என்று பிற்ஜெரால்ட் மற்றும் சல்மான் (1993) குறிப்பிட்டுள்ளனர். இவை பெண்கள் உயர்கல்வி பெறவும் அவை சார்ந்த (ஆசிரிய தொழில் தவிர) அலுவலக தொழில்களில் இணைவதையும் பெரும்பாலான பெற்றோர் விரும்பாமலிருக்கும் நிலைமையை அதிகரிக்கச் செய்கின்றது.

நிறுவன முன்னேற்றம் தொடர்பாக "பணியாளர்கள் எமது முதன்மையான சொத்து" என்ற பிரபல்யம் பெற்ற சுலோகம் பெண்கள் தொடர்பாக பின்பற்றப்படவில்லை. நிறுவனங்களில் ஆண்களுக்கும்

பெண்களுக்குமிடையிலான அதிகார பகிர்வு (Power Sharing) முறையில் காணப்படும் பாரபட்சம் காரணமாக எத்தகைய தொழிலிட வன்முறையிலும் பெண்களே நட்டமடைகின்றனர். தமக்குரிய தொழிலிட வன்முறைகளை வெளிப்படுத்தி நியாயம் கேட்கவோ, சட்ட நடைமுறைகளை மேற்கொள்ளவோ முடியாதவாறு சமூக பண்பாட்டு நியமங்கள் தடைசெய்து வருகின்றன. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி உயர்கல்வி மற்றும் உயர்தொழில் நிறுவனங்களில் அதிகளவிலான வெளிப்படுத்த முடியாத அதிருப்தியுடனே பெண்கள் பணியாற்றி வருகின்றனர். பாலின தன்மையைப் பயன்படுத்தி உடல் ரீதியாகவோ, உளரீதியாகவோ பெண்களுக்கு அதிருப்தி தரும் வேலைச்சூழல் சகபாடிகளினால் அல்லது உயரதிகாரிகளினால் உருவாக்கப்பட்டு வருவதைப் பல ஆய்வுகள் காட்டுகின்றன. இதனால் தமது கல்வித்தரத்தை முழுமையாகவும், உண்மையாகவும், அனுபவிப்பதற்கு, முன்பே அத்தொழிலிலிருந்து இடைவிலகி விடுகின்றனர் அல்லது கூடிய பாதுகாப்புள்ள ஆசிரியத் தொழில் போன்ற கீழ் உழைப்புக்கு மாறி விடுகின்றனர்.

உயர்கல்வி நிறுவனங்களில் உரிய தகவல்களை மறைத்தல், முன்னனி பதவிகளை மறுத்தல், சகபாடிகளின் முன்னிலையில் அவமரியாதையாக நடாத்துதல், வேலைகளில் அனாவசியமாக தலையிடுதல், பதவியுயர்வுகளை தாமதப்படுத்தல் அல்லது மறுத்தல் போன்ற பல மாதிரிகளில் பெண்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். பெண்களின் மென்மையான பண்புகளை பலவீனமாக கருதி ஆண் அலுவலர்களை விடவும் (அதேதரத்திலுள்ள) பெண் அலுவலர்களை அதிகளவு கட்டுப்படுத்தும் நடைமுறைகளினாலும் பெண்கள் உயர்கல்வி நிறுவனங்களில் துன்பமடைகின்றனர். இதனால் உயர்கல்வி கற்றல் உயர்கல்விக்கான உயர்தொழிலில் பணியாற்றல் என்பன தொடர்பாக பாரபட்சமான அனுகூலங்களுடனேயே பெரும்பாலான பெண்கள் வாழ்ந்து வருகின்றனர்.

## வேலை - குடும்ப முரண்பாடு நிலைமைகள்
## (Work Family Conflicts)

உயர்கல்வி கற்று அதற்கு ஏற்ற உயர்தர தொழில்களில் பணியாற்றும் ஆண்களுடன் ஒப்பிடும் போது அதேதரத்தில் உள்ள பெண்கள் அதிக மன அழுத்தங்களுடனும் நாளாந்தம் பரபரப்புடனும், மகிழ்ச்சியின்றியும் வாழ்கின்றனர். இது முற்றுமுழுதாக பெண்கள் என்ற பாலின முறையிலான எதிர்பார்க்கைகளுடன் தொடர்புபட்ட நிகழ்வாகவே காணப்படுகின்றது. கொபெல்மன் (Kopelman : 1983) கிறீன் ஹாஸ் (Green hans : 1985) போடெல் (Beutell : 1985) ஜில்ஸ்ரோம் (Gyllstrom : 1977) பரசுராமன் (Parasuraman : 1989) போன்ற பலர் இவை தொடர்பாக பரவலாக பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

உயர்கல்வி பெற்றதால் பொறுப்பும், வகை கூறலும் கொண்ட மேலாண்மைத் தொழில்களில் பணியாற்றும் பெண்கள் அதே தரநிலையில் உள்ள போது கணவன்மாரை விடவும் அதிகளவுக்கு இத்தகைய வேலை குடும்ப முரண்பாடுகளினால் ஏற்படும் அமையின்மைக்கு உட்படுகின்றனர்.

கணவர், மகன் அல்லது தந்தை உயர்கல்வி கற்கும் காலத்தில் அல்லது தமது பதவியுயர்வுக்கான மேலதிக முயற்சிகளில் ஈடுபடும் காலத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் வேலைப்பளு இருமடங்காகி விடுகின்றது. உடல் ரீதியாக வெகுவாக களைத்துப் போகின்ற நிலைமைகளுடன் மேலதிக பரபரப்பினால் மன அழுத்தங்களுக்கும் உட்பட்டு நோயாளியாகி விடுகின்றனர். பல சந்தர்ப்பங்களில் அவர்களது பணிநிலையின் உயர்தர செயற்பாடுகளுக்காக கிடைக்கின்ற மேலதிகமான நீண்டகால நன்மைகளைக் கூட இத்தகைய வேலை குடும்ப முரண்பாடுகளினால் பெண்கள் தியாகம் செய்து விடுகின்றனர். உயர்கல்வி தொடர்பாக கிடைக்கக்கூடிய 3-5 வருடகால புலமைப்பரிசில்களை ஆண்கள்

பயன்படுத்துவதற்கு மனைவியின் உடன்பாடு அதிகம் வேண்டப்படுவதில்லை. ஆனால் மாறாக மனைவி அல்லது மகள் என்ற குடும்பமட்ட நிலைமைகளில் கணவன் அல்லது தந்தையின் சம்மதம் அவசியமாகி விடுகின்றது. ஏனெனில் பெண் ஒருவா் அத்தகைய நலனை உறுதிப்படுத்த முயலும் போது குடும்பமட்டத்தில் அதிகளவு நட்டங்கள் (Opportanity Cost) ஏற்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. இது மரபு வழியாக தனது தொழிலுக்கு புறம்பாக பெண் சமூக நியமங்களுக்கு அமைவாக விரும்பி ஏற்றுக்கொண்ட மேலதிக குடும்ப கடமைகளிலிருந்தே உருவாகின்றது. இது பெண்கள் வாழ்நாள் முழுவதும் ஏற்றுக்கொள்ளும் தமது முன்னேற்றங்களை தியாகம் செய்யும் குடும்பம்சாா் வகிபங்கு ஆகும்.

உயா் தொழில்கள் புரிந்தாலும் குடும்பமட்ட தேவைகளுக்காகவும் தனது தொழில்சாா் தேவைகளுக்காகவும் தினமும் நீண்ட மணித்தியாலங்கள் ஓய்வின்றி பணியாற்றும் வாழ்வுப் பாங்கும் அவா்கள் மீது திணிக்கப்படுகின்றது. இது பல சமயங்களில் அவா்களது உடல் ஆரோக்கியத்தையும் அவா்களது கல்வி மற்றும் உயா்தொழில் முன்னேற்றங்களையும் அதிகம் பாதிக்கச் செய்து விடுகின்றது.

## உயா்கல்வியில் குறைதீா் செயற்பாடுகள் (Affermative Actions in Higher Education)

உயா்கல்வியினால் பெறப்படும் சிறப்பாா்ந்த நன்மைகளினடிப்படையில் சமூக ரீதியில் வாய்ப்புக் குறைந்தோா்க்கு விசேடமாக இட ஒதுக்கீடு செய்யும் நடைமுறைகள் பற்றி 1960 களிலேயே ஐக்கிய அமெரிக்காவில் பரவலாக விவாதிக்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவில் கருப்பினத்தவா், சுதேசிய இந்தியா்கள், பெண்கள் போன்ற சிறுபான்மையினருக்கு பல்கலைக்கழங்களில் கற்பதற்காக விசேடமாக இடஒதுக்கீடு செய்வது பற்றி 1960களில் பரவலாக

சிந்தித்ததால் 1964 இல குடியுரிமைச்சட்டம் (Civi lRight Act 1964) கொண்டுவரப்பட்டது. பெண்களையும் சிறுபான்மையினராக அங்கீகரித்து சமூக பன்முகவாக்க ஏற்பாட்டின் அடிப்படையில் உயர் குடியினருக்கான பல்கலைக்கழகங்கள் என்று வர்ணிக்கப்பட்ட பிரின்ஸ்ரன், ஹாவாட், யேல் போன்ற பல்கலைக்கழகங்களில் அனுமதிக்குரிய முன்தேவைப்பாடாக பா்ட்சைப்புள்ளிகளைக் கருதாது, சுயாதீனமாக பெண்களுக்கும் குறிப்பாக கருப்பின பெண்களுக்கும் இடஒதுக்கீடு செய்யப்பட்டது. முதலில் 19 மாநிலங்களில் இது நடைமுறைக்கு வந்திருந்தது. அமெரிக்க அரசின் உயர் பதவிகளில் ஒன்றை வகித்த கறுப்பின பெண்மணி கொண்டலினா ரைஸ் பல்கலைக்கழக அனுமதி பெற இத்தகைய குறைதீர் ஏற்பாடு உதவிற்று என்பது குறிப்பிடத்தக்கது. முதலில் உயர்கல்வி நிறுவனங்களும் கூட்டு நிறுவனங்க(கம்பனிகள்)ளுமே இத்தகைய ஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வந்தன.

ஆனால் இந்தியாவில் தனியார்துறையினர் பல்வகைமையை ஏற்க முன்வராததால் அரசாங்கம் தலையிட்டு இதனைக் கொண்டுவரவேண்டியிருந்ததாக பேராசிரியர் வெஸ்கொப் (Prof. Thomas E Weisskopf : 2006) குறிப்பிடுகின்றார்.

இன சிறுபான்மையினர் அல்லது கீழ் வகுப்பினர் என்பதற்காக மட்டுமன்றி பாதிக்கப்படும் பெண் என்ற வகையில் தனக்கு சட்டத்துறைப் படிப்புக்கு அனுமதி கேட்டு பார்பார கிரட்டர் (Barbara Gratter) என்ற பெண் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார். தன்னிலும் குறைந்த புள்ளிகள் பெற்ற கறுப்பின சிறுபான்மையினருக்கு அனுமதி வழக்கப்பட்ட நடைமுறையை எதிர்த்து தாக்கல் செய்த வழக்கிற்குரிய தீர்ப்பாக 1996இல் அமெரிக்க சுப்ரீம் கோட் பெண் என்ற அடிப்படையிலும் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென தீர்ப்பு வழங்கியிருந்தது. இதில் வெள்ளை இன பெண்களுக்கும் நன்மைகிடைத்ததாக குறைதீர் செயற்பாட்டு சங்க நிர்வாக இயக்குனர் சேர்லி வில்சர் (Shirly Wilcher) தெரிவித்திருந்தார்.

எனினும் பலநாடுகளில் பெண்களை பாதிக்கப்படும் வகுப்பினராக ஏற்று விசேட இட ஒதுக்கீடு செய்யும் நடைமுறைகள் இன்றுவரை மேற்கொள்ளப்படவேயில்லை.

## பெண்களின் கல்விச் செலவுக்குரிய வருவாய்கள்

பெற்றோர் கண்ணோட்டத்தில் பெண்களுக்கு உயர்கல்வி வழங்குவதால் எத்தகைய பொருளாதார வருவாய்களும் தமக்குக் கிடைக்கப்போவதில்லை என்று கருதி உயர்கல்விக்கு அனுப்ப விரும்புவதில்லை.

பொதுவாக உயர்கல்வி கற்கும் பெண்களுக்கு 16 அல்லது 17 வருடங்கள் (6+5+2+3/4) கல்விக்காக செலவு செய்தாலும் கற்று முடிக்கும் போது திருமண வயதை அடைந்து விடுவதால் கல்வி முதலீட்டுக்கான வருவாய் தமக்கு கிடைக்கப் போதில்லை என்று இந்தியா, வங்காளதேசம், நேபாளம் போன்ற நாடுகளிலுள்ள பெற்றோர் கருதுகின்றனர்.

பெண்கல்வியின் சமுதாய நன்மைகளைக் கருத்திற் கொள்ளாத நிலைமை பெண்களது உயர்கல்வி முன்னேற்றங்களைத் தொடர்ந்து பாதித்து வருகின்றது.

## முடிவுரை

உயர்கல்வியில் நாடுகள் முழுமையான வளர்ச்சியை காண்பதற்கும் சமூக நீதியுடன் முன்னேற்றங்களின் நன்மைகளை அனைவரும் பகிர்ந்து கொள்ளவும் பெண்களுக்குரிய வாய்ப்பும், வசதிகளும், உரிமைகளும் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியம். உலகரீதியில் இந்த எண்ணமும்,

அபிவிருத்தி மற்றும் கல்வி முன்னேற்றங்களுடன் இணைந்த கருத்தியல்களும் வளர்ந்து வருகின்றன.

எதிர்காலத்தில் பின்வருவன தொடர்பாக விளைதிறன் மிக்க கொள்கை உருவாக்கங்களும் செயற்பாடுகளும் உள்ளூர் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் மேற்கொள்ளப்படல் அவசியம்.

- எல்லா வளர்முக நாடுகளிலும் ஒரேதரத்திலான உயர்கல்வியைப் பெண்கள் பெறுவதற்கு உதவும் வகையில் மெய்நிலைப் பல்கலைக்கழகங்கள் (Virtual Universities) விருத்தி செய்யப்பட வேண்டும். இணையத்தின் வழியான பட்டப்படிப்புக்குரிய வலையமைப்பு விருத்தி செய்யப்பட வேண்டும்.
- வளர்முக நாடுகளில் பாரபட்சமற்ற வகையில் எல்லாத்துறைகளிலும் பெண்கள் சுதந்திரமாக உயர்கல்வியைப் பெறுவதற்கு உதவும் வகையில் விடுதிகளுடனான மகளிர் பல்கலைக்கழகங்கள் பரவலாக உருவாக்கப்படல் வேண்டும்.
- பெண்கல்வியாளர்கள், பெண் ஆய்வாளர்கள், பெண் நிறுவன மேலாளர்கள் போன்றோரை அதிகளவில் உருவாக்குவதற்கான செயற்திட்டங்களுக்கு சர்வதேச ரீதியில் அதிக நிதிவளங்களும் நிறுவன ஏற்பாடுகளும் ஏற்படுத்தப்படல் வேண்டும்.
- பெண்கள் உயர்கல்விச் செயற்திட்டங்கள் நாடுகளின் சமூக பண்பாட்டு நிலைமைகளுடன் முரண்படாதவாறு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். நவீனமயமாக்கம் பண்பாட்டு முரண்நிலைகளை உருவாக்காது பார்த்துக் கொள்வது அவசியமாயுள்ளது.

- சர்வதேச மகளிர் கல்வி உச்சி மகாநாடுகளை சிறப்பாக வடிவமைத்து மகளிர் உயர்கல்வி தொடர்பான விழிப்புணர்வையும் சமூக மட்ட ஆதரவையும் அதிகரிக்க வேண்டும்.

- பெண்களுக்கான உயர்கல்வி விரிவாக்கத்துக்கு நிலைத்திருக்கும் வகையில் உதவக்கூடியவாறு பாடசாலைக் கல்வி ஏற்பாடுகள் பலமான முறையில் அகலப்படுத்தப்பட வேண்டும்.

- உலகளாவிய ரீதியில் மகளிர் உயர்கல்வி தொடர்பான நிறுவன ஏற்பாடுகளும் சட்டங்களும் வலிமையான முறையில் உருவாக்கப்பட வேண்டும். சர்வதேச உதவிகள், மனித உரிமை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பவற்றுடன் சர்வதேச மகளிர் உயர்கல்வியும் ஒருங்கிணைக்கப்பட்டு உரிய செயற்பாடுகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

பெண்களின் உயர்கல்வி தொடர்பான அறியாமையும் தயக்கமும் தடைகளும், தாமதங்களும் மூன்றாம் உலக நாடுகளில் அதிகம் இருப்பதால் இந்த நாடுகளில் இவை அதிகளவில் செயற்படுத்தப்பட வேண்டும். இதில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிறுவனங்கள் எதிர்காலத்தில் தமது கவனத்தை அதிகம் குவித்தல் வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்.


- Bellew Rosewary, Laura Raney Subbarao.K (1992) Educating girls FtD, World Bank.
- Batia.K, Gurbachan (1995) Development Process and female partiapation : Some implications for HRD , New Delhi.
- De mel, Tara (2001) Rethinking Education (Talk) Visaka vidualaya, SLAAED Colombo.
- Fernando, Nimalka (1998) migrants women workers in Sri Lanka Law and Trust so aety, Colombo.
- Garg.V.P (1989) Economics of Education, metropolitan Books New, Delhi.
- Hess, Juergen (Ed) (1999) Education and Social change : Empirical studies for the improvement of Education in Eastern Africa ,ZED, Bonn, Germany.
- Horowitz, Band madhu kislwar (1982) family Life : The unequal deal Manushi New Delhi.
- Johnes Geraint (1993) The Economics of Education : Mc Millan Londan.
- Khadrca, Binod (2004) Emerging world labour markets and the migration of know ledge, working paper, JNU New Delhi.
- Marja, Liisa Swantz (1995) Women eutrepreneurs in Tanzania : A path to Sustaunable livelihoods ,SID Rome.

- Neelu, Roh Metrs (1995) women as human resource :current trends in ataman Resource Development challenges and strategies in a changing scenario, New Delhi.
- Okuni, Akim (2000) Higher Education through the internet D+C Bonn, Germany.
- Potashnik, Michael and Capper Joanne (1998) Distance Education :growth and Diversity F+D World Bank.
- Sad Gopal Anil (2003) Education for too few Frontline, December Chennai.
- Sinnalhamby .M (1999) Privatization of Education South Asian experience ,south Asian study centre , Jaffna.
- Sardrasegaram.S and Gurawardana Raja (1997) Education for Disadvantaged communities in south Asia ,Colombo.
- Tooley Tames (2000) Privake Education :The poorest best chance, November Courier, Unesco.
- Tilak B.G.Jandhyala

  (1988) Cost of Education in India Educational development, Vol 8 No.1

  (1991) Family and Government Invesements in Education ,Educational Development, Vol.II No.2
- Scott, peter (1998) Shaking the Ivory tower The Unesco Courier, September Unesco.
- Sen Ashish kumar (2006) University Education and Affermative action (Article) Out Look ,May , Chennai.

- Hean.J (1994) The organizations of Voilence : Men, Gender Relations and voilences, Human Relations 47 (6)
- Hughes K.D. Tadic.V (1998) Some thing to deal with : Customer Sexual Harassment and womens retail service work in Canada, Gender, work and Organization 5 (4).
- Linstead .S (1997) Abjection and Organization : Men, Voilence and management Haman Relations 50 (9).
- Mills.A.J (2002) Studying the Gendering of organizational culture over time: concerns Issues and strategies Gender, work and organization 9 (3).
- UNIFEM (2002) Masculinity and Gender based violence, fact sheet No.5
- United Nations (1993) Declaration on the Elimination of violence against wodmen proceedingn of the 85th plenary meeting UN Geneva.
- Greea haus.H Jeffery and Beutell.J.Nicholas (1985) Sources of Conflict between work and family Roles , The Acadeany of management Review Vol.10 No.1
- Hartmann (2004) Policy alternatives for solving work family Conflict Annual of the American Acaderny of political and sociel science vol .596.
- Higgins.A Christopher and Duxbary E.Linda (1992) work family conflict : A Comparison of Dual – career and Traditional – career men ,Jounal of organizational Behaciour vol. 13 No.4

- Parasuraman saroj and simmers.A Claire (2001) Type of employment work family conflict and well – Being : A comparative study Journal of organizational Behaviour Vol.22 No.5
- Handapangoda S.Wasana (2007) Recognizing Voilence against women as an obstacle to Organizational peace and Development : A New Vision for an old Issue: Colombo Business Journal. Vol.I No.I Colombo.
- மக்கள் வங்கி
  - (1983) இலங்கையின் உயர்கல்வி, பொருளியல் நோக்கு, ஏப்ரல், கொழும்பு.
  - (1997) உயர்கல்வியும் அபிவிருத்தியும், பொருளியல் நோக்கு, ஜனவரி, கொழும்பு
  - (1994) மனிதவள அபிவிருத்தி, பொருளியல் நோக்கு, ஏப்ரல், கொழும்பு
- சந்திரசேகரம்.சோ
  - (2008) சமகாலக்கல்வி முறைகளின் சில பரிமாணங்கள், சேமமடுபதிப்பகம், கொழும்பு.
  - (2009) இலங்கையில் உயர்கல்வி : பல்கலைக்கழகக் கல்வியின் வளர்ச்சியும் பிரச்சினைகளும், இலங்கை முற்போக்கு கலை இலக்கிய பேரவை, கொழும்பு.
- சின்னத்தம்பி.மா
  - (2007) கல்வியின் பொருளியல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.



பேராசிரியர். மாரிமுத்து சின்னத்தம்பி
*BA.BPhil, Hons (Colombo) PGD.in Education (Jaffna)*
*MA. Economics (Jaffna) M.Phil Education (Jaffna).*

இவர் தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை பாரதி பாஷிய வித்தியாசாலை, நமசிவாய வித்தியாசாலை, வைத்தீஸ்வரா கல்லூரி ஆகியவற்றில் பெற்றார். க.பொ.த. உயர்தர வகுப்பை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்று அங்கிருந்து கொழும்பு பல்கலைக்கழகம் சென்று பொருளியலில் சிறப்புப் பட்டம் (1968 - 1972) பெற்றார்.

பின்பு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிகள் பிரிவில் பொருளியல் விரிவுரையாளராக (1973 - 1974) பணியாற்றினார். பின்பு வட்டு. இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றில் பொருளியல் ஆசிரியராகப் பணியாற்றினார். அக்காலத்தில் சமூகக் கல்வியில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றினார்.

1990இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். 2003 - 2006 காலப்பகுதியில் கல்வியியல்துறையின் தலைவராகப் பணியாற்றியதோடு கல்விமுதுமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிகளின் இணைப்பாளராகவும் பணியாற்றினார். திறமை அடிப்படையில் 2006இல் கல்வியியல் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றார். தற்பொழுது சட்டத்துறையின் பதில் தலைவராகக் கடமையாற்றுகின்றார்.

பொருளியல்நூல்கள் (08) பலவற்றையும், கல்வியியல் நூல்கள் (11) பலவற்றையும் எழுதியதோடு பல்வேறு அங்கீகரிக்கப்பட்ட சஞ்சிகைகளில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ஆசிரிய முகாமைத்துவம் (2004) இலங்கையின் முகாமைத்துவக் கல்வி (2005) ஆகிய நூல்கள் வடகிழக்கு மாகாண அமைச்சின் சிறந்த நூல்களுக்கான பரிசினைப் பெற்றிருந்தன.

தேசிய கல்வி நிறுவகம், தேசியக் கல்வி ஆணைக்குழு, கொழும்பு பல்கலைக் கழகம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், கல்வியமைச்சின் பரீட்சைப் பிரிவு ஆகியவற்றிலும் இவர் பணியாற்றியுள்ளார்.

தென்னாசிய கற்கைகளுக்கான இலங்கைச் சஞ்சிகை என்னும் கலைப்பீடத்தின் ஆங்கில சஞ்சிகையின் முகாமை ஆசிரியராகவும் இவர் பணியாற்றியுள்ளார். தற்போது "கமுதி" என்னும் ஆங்கில - தமிழ் மொழி ஆய்வுச்சஞ்சிகையின் பிரதமஆசிரியராக விளங்குகின்றார்.